1995 மே 2]

விக்ரவாண்டி ஒன்றியம், இராதாபுரம் கிராமத்தையும், வாக்கூர் கிராமத்தையும் இணைக்கின்ற வகையில் பாண்டி வாய்க்காலின் குறுக்கே பாலம் ஒன்று கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

ஆம். வினாவில் குறிப்பிட்டுள்ள பாலம் அமைக்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

2. அறிவிப்புகள்

(அ) உறுப்பினர் கைது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடுகள்) நான் ஒரு அறிவிப்புக் கொடுத்து விடுகிறேன். (குறுக்கீடுகள்) நான் ஒரு அறிவிப்புச் சொல்லிவிடுகிறேன். பிறகு நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பாக இன்றைக்கு எடுத்துக்கொள்வதாக இருக்கிறேன். (குறுக்கீடு) உங்களுடையதை இன்று எடுத்துக்கொள்கிறேன்.

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் மற்றும் தர்மபுரி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்களிடமிருந்து 1-5-1995 ஆம் நாளிட்ட மற்றும் 2-5-1995 ஆம் நாளிட்ட தொலை அச்சுச் செய்திகளில் கீழ்க்கண்ட தகவல்கள் வரப்பெற்றுள்ளன:

[பேரவைத் தலைவர்] [1995 மே 2

(1) I have the honour to inform that Thiru Palur V. Sampath, Member of the Legislative Assembly, Vaniyambadi Constituency was arrested on 30-4-1995 at 21.30 hours at Hindu Higher Secondary School, Ambur vide Ambur Town Police Station Crime No.267/95 under section 151 Cr.P.C read with 7(1)(a) CLA Act and he is being sent for remand.

(2) Thiru. K.A. Manoharan, MLA (Congress), Hosur Constituency, along with others, were arrested today, 2-5-1995, at 02.00 hours at Hosur in connection with forthcoming `bundh' on 4-5-1995 vide Hosur Town Police Station Crime No.342/95 under section 151 Cr.P.C. read with 7(1)(a) CLA Act. They are being sent for remand (குறுக்கீடு).

முற்பகல் 11-15

3. தகவல் கோரல்

அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினையைக் (4-5-1995 அன்று எதிர்க்கட்சிகள் நடத்தவுள்ள "பந்த்" தொடர்பாக கைது) குறித்து அவையில் எழுப்புதல்—பேரவைத் தலைவர் தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பரிதி இளம்வழுதி உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்ததையும் எடுத்துக் கொள்கிறேன் என்றுதான் சொல்கிறேன். உட்காருங்கள். சேப்பாக்கம் பகுதியில் குடிசைமாற்று வாரிய குடியிருப்பில் உள்ள புவனேஸ்வரி என்பவர் தாக்கப்பட்டது குறித்த பிரச்சினையை ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கடந்த வெள்ளிக்கிழமை திரு. பரிதி இளம்வழுதி என்னிடத்திலே ஒரு அறிவிப்பு கொடுத்து இருந்தார். இன்றைக்கு எடுத்துக்கொள்ளப் போவதாக அன்றைக்கே அறிவித்து இருந்தேன். புவனேஸ்வரி என்பவர் தாக்கப்பட்டது பற்றிய பிரச்சினையை மட்டும் சிறப்புக் கவன ஈர்ப்பாக இன்று எழுப்ப அனுமதிக்கிறேன். அதைப்பற்றி எழுப்பலாம். இது தன்னுடைய தொகுதி சம்பந்தப்பட்டது என்கிற காரணத்தால் திருமதி ஜீனத் சர்புதீன் அவர்களும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். திரு. பரிதி இளம்வழுதியிடம் இன்றைக்கு எடுத்துக் கொள்வதாக அன்றைக்கே அறிவித்தேன். ஆகவே, அதை இன்றைக்கு எடுத்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்) உங்களுடைய அறிவிப்பை நான் எடுத்துக்கொள்ளவில்லை. (குறுக்கீடுகள்) திரு. குமாரதாஸ் நீங்கள் எந்த அறிவிப்பையும் கொடுக்கவில்லையே; நீங்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) நீங்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், நீங்கள் கொடுத்திருக்கிற அறிவிப்புக்கு நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அனுமதி